# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

## காயல்பட்டணம்

## வேலைவாய்ப்பு மையக்கூடுகை

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி கலையரங்கில் 28.01.17 அன்று காலை 11.00 மணியளவில் கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யது அப்துர் ரஹ்மான் அவர்கள் தலைமையில் வேலைவாய்ப்பு மையக்கூடுகை நடைபெற்றது. மூன்றாமாண்டு வணிக நிர்வாகவியல் மாணவி S.D. பல்கீஸ் புஷ்ரா கிராத் ஓத தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் தொடங்கியது. வணிக நிர்வாகவியல் துறைத்தலைவியும் வேலைவாய்ப்பு மையத்தலைவியுமான பேராசிரியை திருமதி செ.அ. ரஹ்மத் ஆமீனா பேகம் MBA., M.Phil., MBA(HR), வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு துறை அலுவலர் திரு.D. நாகேந்திரன் மாணவிகளை எதிர்நோக்கி இருக்கும் வேலைவாய்ப்புகள் குறித்து உரையாற்றினார்.

தொடர்ந்து மாவட்ட சுகாதாரத் துறையைச் சார்ந்த திரு.S. மகேஸ்வரன் வேலை வாய்ப்பிற்கான போட்டித் தேர்வுகள் குறித்து அறிவுறுத்தினார். மாணவிகள் தங்கள் ஐயங்களைக் கலந்துரையாடல் மூலம் நிவர்த்தி செய்தனர். வணிக நிர்வாகவியல் துறை உதவிப்பேராசிரியை செல்வி R. விஜி M.Com., M.Phil., MBA., நன்றி கூறினார். மூன்றாமாண்டு வணிக நிர்வாகவியல் துறை மாணவி மைமூன் ஆமினா துஆ ஓத நாட்டுப்பண்ணுடன் கூட்டம் நிறைவடைந்தது. இக்கூட்டத்தில் கல்லூரி செயலர் வாவு W.M.M மொகுதஸீம் B.A., (CS), கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி J. எல்லோரா M.Com., M.Phil., Ph.D., ஆகியோர் கலந்து கொண்டனர்.